உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருஎ	திருவள்ளுவர் ஆண்டு 1992 பிலவ — புரட்டாசி	பகுதி. சா
Vol. 57	1961 — September	No. 6

இளம்பூரணர் எழுத்துரை

[ஆ, சிவலிங்கனுர், மயிலம்]

உரைக் குறிப்புக்கள்

பாயிரம்

''வடவேங்கடம்........படிமையோனே''

''கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள்போல'' இத் தொடரில் உள்ள 'கற்பு' என்பதற்குக் கற்பொழுக்கம் என்பது மட்டுமன்றிக் கல்வி என்பதும் பொருளாகக்கொள்ளல் வேண்டும். கற்பு என்பது ஒருத்திக்கு, அவள் கற்றுவல்லான் மனைவியாயினும் கல்லாதான் மனைவியாயினும் இன்றியமையாச் சிறப்பினதேயாம். ஆதலின், ''கணவற்குக் கற்புடையாள்போல'' என்றே கூறியிருக்கலாம். ,கற்றுவல்ல' என அடைகொடுத்து அவன் கல்வியை விதந்தமையின் கற்பு என்பதற்குக்கல்வியும் கொள்ளல் வேண்டுவதே. அவ்வாறு கொள்ளாக்கால் கற்றுவல்ல கணவற்குத்தான் அவள் இன்றியமையாதவள் என்று பொருள்படும். மனைவியின் கல்வி கணவனின் கல்வி வன்மைக்குத் துணைபுரியுமன்றோ?

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY

குறிச்சி: நுழையும் வாயில் சிறியதாயும் நுழைந்து உட்சென்ற பின்னர் வெளிவருதற்கு அவ்வாயில் எளிதில் கண்டறியப்படாததாயும் உள்ள ஒரு சிறு குடிசை.

மலை: அளக்கலாகா அளவும், பொருளும், அசைக்க முடியாத நிலையும், நெடுந்தொலைவில் தெரியும் தோற்றமும் வறந்த காலத்தும் வளம்தரும் வண்மையும் உடையது. அது போல், அளக்கலாகாக் கல்வியளவும், தன் நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டுவைத்த அளக்கலாகாப் பொருளும், பிறரால் வாதிட்டு வெல்ல முடியாத நிலையும், பிறதேயத்தார்க்கும் தெரியவரும் புகழும், எக்காலத்தும் கல்விப் பொருள் உதவும் வண்மையும் உடையவன் ஆசிரியனாவான்.

நிலம்: பெருமை, திண்மை, பொறை, பருவத்துக்கும் உழவர் முயற்சிக்கும் ஏற்பப் பயன்தருதல் ஆகியவற்றை யுடையது. அதுபோல, பெருமை, திண்மை, பொறை, மாணவன் பருவத்திற்கும் உழைப்புக்கும் ஏற்பப் பயிற்றல் ஆகியவற்றையுடையவன் ஆசிரியனாவான்.

பூ: மங்கலமானது; எக்காரியங்களுக்கும் இன்றியமையாதது; யாவராலும் மகிழ்ந்துகொள்ளப்படுவது; மென்மையுடையது; பொழுதொடு மலர்வது. அதுபோல, மங்கலமானவனாய், ஊரில் எக்காரியத்துக்கும் இன்றியமையாதவனாய், யாவராலும் போற்றிக்கொள்ளப்படுபவனாய், இளகிய மனம் உடையவனாய், எப்பொழுதும் மலர்ந்த முகமுடையவனாய் இருப்பவன் ஆசிரியனாவான்.

நிறைகோல்: நடுநிற்பது; ஐயம் தீரப் பொருள் அளவை உணர்த்துவது. அதுபோல, யாவரிடத்தும் பொதுநோக்குடையவனாய், ஐயந்திரிபு தீரக் கல்விப்

உயர்திரு கணேசய்யர் போன்றார் குறிப்புக்களும் கொண்டு எழுதப் பட்டது.

பொருளை அறிவிப்பவனாய் இருப்பவன் ஆசிரியனாவன்.

கழற்பெய்குடம்: தன்னுள் பெய்யப்பட்ட கழற்சிக் காய்களைப் பெய்த முறையிலன்றி முன்னவை பின்னவையாகவும் மிகுதியாகவும் மாறித் தருவது. அதுபோல, தான் கற்ற முறையிலன்றி மாற்றியும் மிகுதியாகவும் கல்விப் பொருள்களைக் கூறுபவன் ஆகாஆசிரியன்.

மடற்பனை: காய்கனிகளைத் தானே தருவதன்றித் தன்பால் ஏறி எளிதில் ஒருவன் கொளத் தராதது. அது போலத் தானே சொல்லுவதன்றித் தன்னிடம் மாணவன் வந்து கேட்கச் சொல்லாதவன் ஆகாஆசிரியன்.

முடத்தெங்கு: தன்னை வளர்ப்பவனுக்குப் பயன் தராது அடுத்த வீட்டானுக்குத் தருவது. அதுபோலத் தனக்கு வழிபாடு செய்பவனுக்குப் பாடம் சொல்லாமல் அயலானுக்குச் சொல்பவன் ஆகாஆசிரியன்.

பருத்திக்குண்டிகை: குண்டிகையானது தன்னிடம் பருத்தியை அரிதாகப் பெய்யப்படுவதோடு பிறர்க்கும் எளிதில் எடுக்கும்படிக் கொடாதது அதுபோலத் தானும் ஆசிரியனால் அரிதில் பயிற்றப் பயின்று பிறர்க்கும் எளிதில் சொல்லாதவன் ஆகாஆசிரியன்.

அன்னம்: பாலும் நீரும் கலந்துவைத்தால் பாலை மட்டும் கொள்வது. அதுபோல விளக்க வேண்டிக் கூறப்படும் கருத்துக்களுள் வேண்டியன மட்டும் கொள்பவன் நன் மாணாக்கன்.

கிளி: சொன்னதைச் சொல்வது. அதுபோல ஆசிரியன் சொன்னவற்றை விடாது சொல்பவன் நன்மாணாக்கன்.

நன்னிறம் = வெண்ணிறம்: பிற எந்நிறங்களையும் ஏற்கத்தக்கது. அதுபோல ஆசிரியன் பயிற்றும் எப்பாடங்களையும் கேட்டறியத் தக்கவன் நன்மாணக்கன்.

நெய்யரி: கோதுகளை நிறுத்திச் சாற்றை மட்டும் உட்புகவிடுவது. அதுபோலத் தேவையற்றனவற்றைவிடுத்துத் தேவையானவற்றை மட்டும் மனதில் இருத்துபவன் நன்மாணக்கன்.

யானை: பெருமையுடையது; ஒன்றை மனதில் நிறுத்துவது; தன் குழுவைக் காப்பது. அதுபோலப் பெருமையுடையனாய் ஆசிரியன் கூறியவற்றை மறவாதவனாய்த் தன்னினத்தைப் போற்றுபவனாய் உள்ளவன் நன்மாணக்கன்.

ஆனேறு: மேய்ந்த புற்களை மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து பக்குவப்படுத்தி உட்செலுத்துவது. அதுபோலக் கேட்ட பாடங்களை ஓரிடத்திருந்து மீட்டும் சிந்தித்துத் தெளிந்து மனத்திலிருத்துபவன் நன்மாணக்கன்.

குரங்கெறி விளங்காய்: குரங்கையெறிந்து கொண்ட விளங்காயையுடையவன் எனப் பொருள்கொள்க. விளா மரத்திலுள்ள காயை விரும்பிய ஒருவன் அதனைப்பெறமுடியாமல் அம்மரத்திலிருந்த குரங்கினை நோக்கி ஒரு கல் விட்டெறிய அக்குரங்கு அவனையடிக்க வேண்டி விளங்காயைப் பறித்து அடிக்க அதனைக்கொள்வன். அவன்போல ஆசிரியனிடத்து நூற்பொருள் உணர எண்ணியவன் அவனை அடிப்பதுபோலும் வினாக்களையெழுப்பி, உரைக்க உணர்பவன் தீய மாணக்கன். (இக்காலத்தில் மேடைப் பேச்சாளரின் பேச்சு விறுவிறுப்பும் கருத்தும் இன்றிப் போமாயின், ஒருவர், அவரைப் பற்றிக் குறைவான கேள்விகளை எழுதிக் கொடுத்துப்பின் அவரால் கருத்துக்களும் விறுவிறுப்பும் உள்ள பேச்சைக் கேட்பதும் குரங்கெறி விளங்காயாம்)

எருமை: குளத்தைக் கலக்கி நீரைக் குடிக்கும். அது போல ஆசிரியனை வருத்தி நூலைக் கொள்பவன் தீயமாணக் கன்.

ஆடு: இக்கரைக்கு அக்கரை பச்சை எனக் கருதி ஓரிடத்து நில்லாதது அதுபோல இவர்க்கு அவர் நல்லாசிரியர் எனக் கருதி ஒருவரிடத்து நில்லாது பலரிடத்தும் அலைபவன் தீய மாணக்கன்.

தோணி: இயக்குவோர் வழி யியங்குவது; நீரிலன்றித் தரையில் இயங்காதது. அதுபோலச் சொல்வோர் வழியெல்லாம் நடப்பவனும் படித்த நூலிலன்றிப் பிற நூல்களில் அறிவு செல்லாதவனுமானவன் தீய மாணக்கன்.

'வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எனவே நூல் நுதலியதூஉம் பயனும் பெறப்பட்டன'': உலக வழக்கும் செய்யுள் வழக்கும் மாறுபடாமை காரணமாக இந்நூல் செய்யப்படுதலின் வழக்கும் செய்யுளும் நுதலியது என்பதும், அவை மாறுபடாமை வழங்கல் பயன் என்பதும் பெறப்பட்டன.

''முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி எனவே வழியும் யாப்பும் காரணமும் பெறப்பட்டன': 'முந்து நூல் கண்டு' என்பதால் இந்நூல் அதன் வழி நூல் என்பதும், அதனல் அந்நூலில் கூறிய தொகைவகை விரிகளுக்கேற்பக் கூறலின் அந்நூல் யாப்பே இந்நூற்கும் யாப்பு என்பதும், 'முறைப்பட எண்ணி என்பதால் அதுவே நூல் செய்யக் காரணம் என்பதும் பெறப்பட்டன.

''கடல் கொள்வதன் முன்பு பிறகாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது''. இந்நூல் இயற்றிய காலத்தில் தமிழகத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும்

கடல் (எல்லையாக) இருந்தமையின் வடவேங்கடம் என வட வெல்லை ஒன்றையே கூறின் அமையும். தென்குமரி எனத் தென் எல்லை கூறவேண்டுவதில்லையே எனின், கிழக்கிலும் மேற்கிலும் எக்காலத்திலும் கடல் எல்லையாக இருக்கத் தெற்கில் மட்டில்ஒருகாலத்தில் வடக்குப்போலப்பிறநாடுகள் இருந்து பின்னர்க் கடல் கொண்டமையின் அந்நாடுகளை மனதில்கொண்டு (இன்று கடல் எல்லையாயினும்) பழைய குமரியாற்றை எல்லையாகக் கூறினர். (இதனால் கடல்கொள் வதன் முன் தமிழகத்துக்கு அப்பால் தெற்கில் பிற (மொழி) நாடுகளும் இருந்தன என்னலாம்.)

தீர்த்தம்: தூய்மைப் பொருள். வினை—நோய் தீர்ப் பது தீர்த்தம் என்றாயிற்று. வடவேங்கடம் மாலவன் இட மாதலாலும், குமரி கன்னிப் பகவதியுறையும் இடமாதலா லும் மலையும் ஆறுமாகிய அவை தீர்த்தமாயின.

ஒன்றன் இலக்கணத்தோடு ஒன்றன் இலக்கணத்தை ஆராய்தல்: குற்றியலுகரமானது, குறிலிணைக்கீழ், குறி லிணையொற்றின் கீழ், குற்றொற்றின்கீழ், குறில்நெடிற்கீழ், குறில்நெடில் ஒற்றின்கீழ், நெடிற்கீழ், நெடிலொற்றின்கீழ் என்ற ஏழிடத்தும்வரும் என யாப்பிலக்கணமுடையார் கொண்ட இலக்கணத்தினை, நெடில்தொடர்,உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத் தொடர் ஆகிய அறுவகைத் தொடர் இறுதியாக வரும் என்ற சொல்லிலக்கணத்தோடு சேர்த்து இடப்படுதல் போல்வதாம்.

"நூல்செய்யும் இலக்கணம் எல்லாம் இந்நூலுட்படச் செய்தான் என்பது": நூல்செய்யும் இலக்கணம் யாவும் இத்தொல்காப்பியத்திலேயே அமையுமாறு செய்தான் என்

பது. அன்றியும் நூல் செய்யும் இலக்கணங்கள் யாவும் இந் நூலுள் (செய்யுளியல் மரபியல்) பொருந்தச் செய்தான் என்பதுமாம்.

''நேரினமணியை......புலவர்'': ஒரு சாதியாய் உள்ள மணிகளை முறையே பதித்தாற்போல ஒரு சாதியாய் உள்ள பொருள்களை ஒரு வழிப்படக் கூறுவது ஓத்துறுப்பாம் எனச்சொல்லுவர் உயர் மொழிப் புலவர். (நன்.சிவ.உரை)

"நுட்பம்......சூத்திரம்": நுட்பமும் அழகும் திண்மையும் சொற்சுருக்கமும் கருத்தும் ஆகியவற்றுடன் சேர்ந்து வருந்திப்பெறுதலில்லாத பொருளாகிய பயன்நிகழ் வதை உடையது சூத்திரம்.

'பொதுவினும்......கருத்தாகும்'': போற்றிக்கொள்ளுங்காலை பொதுவிதியானும் சிறப்பு விதியானும் ஒன்று ஒன்று எய்தலும், எய்தியவை இகந்துபடாமற் காத்தலும், காத்தவற்றுடன் பிறிது (சிறப்பு) விதி வகுத்தலும் அச்சூத்திரத்தின் கருத்தாம்.

''அதுவே பிண்டம்..........என்ப'': அச்சூத்திரம் பிண்டம் முதலாகக் கூறப்பட்ட வேறுபாடுகளுடன் பொருந்திய பெயரையே தனக்குப் பெயராய்ப் பொருந்தும் என்பர். (பிண்டச்சூத்திரம், தொகைச்சூத்திரம் என்பனவாகப் பெயர் பொருந்தும்)

''ஆற்ற தொழுக்கே........ கிடக்கைப்பயனே'': சூத்திரக் கிடக்கையாகிய பயன் ஆற்றொழுக்கு,தேரை(தவளை)ப் பாய்த்து, சிங்க நோக்கு, பருந்தின் வீழ்வு என்ற அந்நான்கு வகையாம்.

''பொழிப்பே.........நான்கென்ப'': பொழிப்பு முதலாகவுள்ள நான்கும் சூத்திரப் பொருளுரை என்ப,

"பாடம்........பொழிப்பே": ஆராயுமிடத்து மூல பாடமும், பதவுரையும், உதாரணமும் என்ற இவற்றில் மாறுபாடில்லாமல் வருவது பொழிப்புரையாம்,

"தன்னூல்.....புலவர்": தன்னூலிலிருந்தும் பிறர் நூலிலிருந்தும் வினக்களும், அவற்றின் புறமே தோன்றும் விடைவேறுபாடுகளும் ஆகியவற்றைக் கூறுதல் சொல்லப் பட்ட அகலவுரை என்பர் புலவர்,

"ஏதுவின்........நுட்பம்": அங்ஙனம் தோன்றிய வினு விடைகளைக் காரணங்காட்டி ஐயந்திரிபுகளை நீக்குவது நுட் பவுரை,

"துடைத்து ....எச்சம் என்ப": அங்ஙனம் ஐயந்திரி புகளை நீக்கி முடிவாகக் கொண்ட பொருளைக் கூறுவது எச் சவுரை என்பர்,

"அப்புலம்........அமையும் என்ப": நூல் செய்வான் தான் செய்ய நினைத்த அவ்விலக்கணத்தைக் குற்றமறத் தெரிந்து, முதல் நூலிடத்துப் போற்றிக் கூறப்பட்ட பொருள்களையும் நன்கறிந்து. உலக வழக்கின் திட்பத்தொடு கூடிய தெளிவும் உடையவன் அந்நூல் செய்தற்குத் தகுதி யுடையவன் என்ப (புலம்—இலக்கணம், நூல்)

"சூத்திரம்........நுண்ணியோரே": சூத்திரமும் உரை யும் என்ற அவ்விரண்டு கூறுகளையும் முறைப்பட வியற்று தலை நூல் இயற்றுதல் என்பர் நூற்பயனுணர்ந்த நுண்ண றிவுடையோர் (சூத்திரம் மட்டும் எனின் மூல நூல் என் றும், உரையும் இயற்றப்படின் உரை நூல் என்றும் பெயர் பெறும்)

"ஈரைங்குற்றமும்........புலவர்": குன்றக்கூறல் முத லிய பத்துக்குற்றமும் இன்றி நன்ருக அம்மை முதலிய எண்

வகை அழகுமுடையது நூல் என்பர் புலவர், பத்துக்குற்றமாவன: குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியதுகூறல், மாறுகொளக் கூறல், வழூஉச் சொற் புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்றுபயனின்மை என்பன. எண்வகை அழகுகளாவன: அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, இழைபு, புலன் என்பன.

முன்னுரை

எழுத்துணர்த்திய எட்டு வகை

1. எழுத்து இனைத் தென்றல்: "எழுத்தெனப்படுப.....முப்பஃது...... மூன்றலங்கடையே." (1) குறில் ஐந்து, நெடில் ஏழு என்றாற் போல்வன,

2. இன்னபெயரவென்றல்: "அகரம், னகரம், குற்றிய லிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் (1, 2) என்றாற் போல்வன.

3. இன்னமுறைமைய என்றல்: "அகர முதல் னகரவிறுவாய்" (1) என முறைப்படுத்தியது போல்வன.

4. இன்ன அளவின என்றல்: "அவற்றுள், அ இ உ எ ஒ என்னும் அப்பாலைந்தும், ஓரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப" (3) என வருவது போல்வன.

5. இன்னபிறப்பின என்றல்: பிறப்பியலில் கூறப்படுவன.

6. இன்ன புணர்ச்சிய என்றல்: தொகைமரபு உருபியல் முதலியவற்றிற் கூறப்படுவன. (இயல்பு, திரிபுப்புணர்ச்சிகள் பற்றியன)

7. இன்னவடிவின என்றல்: "உட்பெறுபுள்ளி உருவாகும்மே" (14) "மெய்யின் இயற்கைபுள்ளி யொடு நிலையல் (15) என்றாற் போல்வன. இவை வரிவடிவத்திற்கேயுரியன.

8. இன்னதன்மைய என்றல்: "குறுமையும் நெடுமையும் அளவிற்கோட லின் தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல" (50) என்பது போல்வன. இன்னவடிவின என்றலும் இன்ன தன்மையஎன்றலும் ஆகிய இரண்டும் ஆசிரியரால் கூறப்படவில்லை என இளம்பூரணர் எழு தினும் வரிவடிவம் கூறப்பட்டமையும் அகர் என்பதின் ரகரம் குறி லிணைக்கீழ் ஒற்றாக நிற்குமிடத்து நெடிற்கீழ் ஒற்றாக நின்ற தன்மை யது என்றமையும் கொண்டு அவ்விரண்டிற்கும் உதாரணம் கூட்டப் பட்டது.

எட்டிறந்த பலவகை:

1. உண்மைத் தன்மை: எழுத்துக்களின் குறுமை, நெடுமை, வன்மை மென்மை, இடைமைகளும், பிறப்புத்தன்மைகளும், "மெய்யின் இயக் கம் அகரமொடு சிவணும்" என்றாற்போன்ற இயக்கத் தன்மைகளும் பிறவுமாம்.

2. குறைவு: மாத்திரைச் சுருக்கம். குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகார ஔகாரக் குறுக்கங்கள், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் பற்றியன.

3. கூட்டம்: மெய்யும் உயிரும் கூடும் உயிர்மெய்க் கூட்டம் பற்றியன. "மெய்யோடியையினும் உயிர் இயல்திரியா" (10) "புள்ளியில்லா எல்லா மெய்யும்' (17) என்றாற் போல்வன.

4. பிரிவு: எழுத்தின் பிரிவு "மெய்யுயிர் நீங்கிற் றன்னுருவாகும்" (40) என்றாற் போல்வன.

5. மயக்கம்: இடைநிலை மயக்கம் கூறுவன. (23—30)

6. மொழியாக்கம்: எழுத்துக்கள் தொடர்ந்து மொழியாதல் பற்றியன. "ஓரெழுத் தொருமொழி" (45) என்றாற் போல்வன.

7. நிலை: மொழிக்கு முதலில் நிற்பன, ஈற்றில் நிற்பன பற்றியன. "பன்னீருயிரும் மொழி முதலாகும்" என்றாற்போல் வனவும் (69-82)

8. இனம்: வல்லினம் மெல்லினம் இடையினம் என்பன (19 - 21)

9. ஒன்று பலவாதல்: ஓரெழுத்தே பல எழுத்தாதல். 'செப்பொன் பதின்றொடி' என்பதில் 'பொ' என்ற எழுத்து, பொன்னாராய்ச்சியுள் வழி அவ்வெழுத்தாகவும், செம்பு ஆராய்ச்சியுள்வழி பு, ஒ என ஈரெழுத்தாகவும் ஆதல் போல்வன. "எழுத்தோரன்ன பொருள் தெரி புணர், இசையில் திரிதல் நிலைஇயபண்பே" (142) என்பது போல்வன.

10. திரிந்ததன் திரிபு அது என்றல், 11 பிறிது என்றல், 12 அதுவும் பிறிதும் என்றல் ஆகிய மூன்றும் பற்றித் 'திரிந்ததன் திரிபு' என்ற தலைப்புக் கட்டுரையில் விளக்கம் காண்க.

13. நிலையிற்று என்றல்: இன்னவிடத்து எழுத்து நிலைக்கும் என்றல். புணர்ச்சியிடத்து இன்னவெழுத்து மிக்கே வரும் என்றலும், இன்ன விடத்துத் திரிவது இன்னவிடத்துத் திரியாதே நிலைக்கும் என்றலும் போல்வன. "சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின், ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்" (206) எனவும், "நூறூர்ந்துவரூஉம் ஆயிரக்கிள விக்குக், கூறிய நெடுமுதல் குறுக்கமின்றே" (393) எனவும் வருவன போல்வன.

14 நிலையா தென்றல்: இன்னவிடத்து இவ்வெழுத்து நிலையாது என்ற லும் இன்னவிடத்து நிலைப்பது இன்னவிடத்து நிலையாது என்றலு மாம் "மகரவிறுதி வேற்றுமையாயின், துவரக்கெட்டு" (311) என்ற தும், "குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும், அறியத்தோன் றும் அகரக்கிளவி" (227) என்பதில் நிலைக்கும் என்ற அகரம், "இரா வென்கிளவிக் ககரமில்லை" (228) என்பதில் நிலையாது என்ற தும் போல்வன. "ஆறன் உருபின் அகரக்கிளவி, ஈரூரு அகரமுனைக் கெடுதல் வேண்டும்" (116, என்றதும் முன்னையது போல்வதாம்.

15. நிலையிற்றும் நிலையாதும் என்றல்: ஓரிடத்திலேயே நிலைப்பதும் நிலையா ததும் என்றல். "வாழிய வென்னும் சேயென்கிளவி, இறுதி யகரம் கெடுதலும் உரித்தே" (212) என்பது போல்வன. தினைகுறிது, தினைக்குறிது (159) போன்ற உறழ்ச்சி முடிவுகளும் அன்ன.

இன்னோரன்ன என்றதால் எழுத்துக்கள் திரியும் என்றலும், திரியா வென்றலும் திரியும் திரியா வென்றலும் கொள்க.

"லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
தநவென வரிற் றனவா கும்மே." (150) என்றாற் போல்வன திரியும் என்றல்.

"உகரமொடு புணரும் புள்ளியிறுதி
யகரமும் உயிரும் வரும்வழி யியற்கை" (164) என்றாற் போல்வன திரியா வென்றல்.

"மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே" (340) எனவும்

"தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேல்நிலை ஒத்தலும்" (341) எனவும்
வருவனபோல்வன திரியும் திரியா வென்றல்.

இன்னும் இன்னோரன்ன என்றதால் எழுத்துக்கள் தொடர்ந்து இன், அன், அத்து, வற்று என்பன முதலியவாகச் சாரியைச்சொற்களாகி வருவனவும் கொள்க.

கருவி செய்கைகள் பற்றிக் 'கருவியும் செய்கையும்' என்ற தலைப்புக் கட்டுரையிற் காண்க.

தமிழ் இலக்கிய வாயில்

2. தமிழ் இலக்கியம்

அ. கி. பரந்தாமனுர் M. A,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

முன்னுரை

சுவைத்து இன்புற்று ஒருவருடைய உள்ளத்தினின்று வழிந்தொழுகும் ஆர்வத்தாலும், தாமடைந்த இன்பத்தை உலகமும் கண்டு இன்புறவேண்டும் என்று கருதும் பெரு விருப்பத்தாலும் உருவாகும் வெளியீடே கலையாகும். இக் கலையானது தொழிற்கலை என்றும் கவின்கலை என்றும் இரு வகைப்படும். தொழிற்கலை மக்களுடைய உடை, உணவு முதலிய தேவைகளை நிறைவேற்றப்பயன்படுவது. கவின் கலையோ மக்களுடைய அறிவு, உணர்ச்சி ஆகிய ஆற்றல்களை ஏற்றமுறத் தூண்டி வளர்ப்பதற்கு உதவுவது. ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம் இவை கவின் கலைகளாகும். கவின் கலையை நுண்கலை என்றும் கூறுவர். ஓவியமும் சிற்பமும் காட்சியின்பத்தை அளிக்கும். இசை செவிக்கு இன்பம் கொடுக்கும். இலக்கியமோ அறிவுக்கும் உணர்ச்சிக்கும் நலமுற ஆக்கமளிக்கும். ஆதலினல், இலக்கியக்கலை நுண்கலைகளைச் சார்ந்த மற்ற மூன்றிலும் சிறந்து விளங்குகிறது.

இலக்கியம் என்பதன் விளக்கம்

இலக்குடன் - குறிக்கோளோடு - இலங்குவது இலக்கியம். ஆணே பெண்ணே தான் எண்ணிய எண்ணத்தை,

கண்ட கனவை, கொண்ட குறிக்கோளை எழுத்து வடிவில் அழகுற எழுதிவைப்பது இலக்கியம் என்பர். மானிடரின் உள்ளுணர்ச்சியைத் தட்டியெழுப்புவது எதுவோ அதுவே இலக்கியம் என்றும் கூறுவர். ஒரு சிலர் எது படிக்கப் படிக்கப் படிக்கும்படி தூண்டுகிறதோ அதுவே இலக்கியம் என்றுரைப்பர்.

ஹட்சன் என்ற ஆங்கிலப் பேரறிஞர் மொழியின் வழியாக வாழ்க்கையினை உணர்த்துவதே இலக்கியம் என்றார். உண்மையில் இலக்கியம் வாழ்க்கையிலிருந்தே மலர்கிறது. ஆதலால், வாழ்க்கையின் அனுபவத்தாற்றான் இலக்கியம் நமக்கு விளங்குகிறது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்து அடைக்கலக் காதையில், "பதியெழு அறியாப் பண்புமேம் பட்ட மதுரை மூதூர் என்னும் அடிகளைக் காண்கிறோம். 'அவ்விடத்தினின்றும் நீங்குதல் அறியாத முறைமை மேம் பட்ட மதுரை மூதூர் என்று அடியார்க்கு நல்லார் அவ்வடிகளுக்கு உரையெழுதியுள்ளதையும் பார்க்கிறோம். இருந்தாலும், பொருள் விளக்கமாகத் தெரிகிறதா என்றால் இல்லை, 1942ஆம் ஆண்டில் சப்பான் படையெடுப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சத்தால் மக்கள் கடற்கரை நகரங்களை விட்டுத் தக்க பாதுகாவலான இடங்களை நாடிச் சென்றபோதுதான் அவ்வடிகளுக்குப்பொருள் செவ்வையாகத் தெரிந்தது. படையெடுப்புக் காரணமாக மக்கள் குடி பெயர்தலை அறியாத மதுரை மூதூர் என்பது அவ்வடிகளுக்குப் பொருள். வாழ்க்கையை ஒட்டியே வாழும் இலக்கியம் தோன்றுவதால் வாழ்க்கை அனுபவம் தேவைப்படுகிறது. எனவே, இலக்கியம் வாழ்க்கையிலிருந்து தோன்றுகிறது என்றும் உண்மை புலனாகக் காணலாம்,

எமர்சன் என்ற அமெரிக்கப் பேரறிஞர் சிறந்த கருத்துக்களின் பதிவே இலக்கியம் என்றார். ஆம்! சிறந்த கருத்

துக்களின் தொகுப்பாகத்தான் வாழும் இலக்கியம் விளங்கு கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக வான்புகழ் வள்ளுவர் இயற்றிய திருக்குறளைக் கூறலாம். அருங்கருத்துக்களின் பெருங் கருவூலமாக இருப்பதனாலன்றோ இன்றும் அந்நூல் உலகப் பொதுநூலாக, ஒவ்வொரு நாட்டினரும் தத்தமக் குரிய இலக்கியமாக ஏற்றமுறப் போற்றும் நிலையை அடைந்துகொண்டு வருகிறது.

மற்றோர் ஆங்கில அறிஞர் கார்லைல் என்பார் மக்களை நல்லாற்றுப் படுத்தும் சிறப்புடையது எதுவோ அதுவே இலக்கியம் என்றார். கலை கலைக்காகவே என்பது உண்மை தான். அழகுணர்ச்சியைத் தட்டியெழுப்பி இன்பமளிப் பதே கலையின் குறிக்கோளாகக் கூறலாம். இது வடை வடைக்காக என்றும் சோறு சோற்றுக்காக என்றும் சொல் வது போல் இருக்கிறது பசியை நீக்குவதற்கு இவை சுவை யோடு கூடியிருப்பதை மறந்து விடுகிறோம். தமிழ்ச் சான் றோர்கள் கலை கலைக்காக என்னும் இக்கருத்தைத் தக்கதாகக் கொள்ளவில்லை. அவர்கள் அழகுணர்ச்சியை மட்டும் இலக்கி யத்தின் குறிக்கோளாக எண்ணவில்லை; மக்களை நல்லாற்றுப் படுத்தலையும் இலக்கியத்தின் நோக்கமாகக் கருதினர் கள். இதனாலன்றோ பலகலைக் குரிசில் பவணந்தி முனிவர் தமது இலக்கண நூலாகிய நன்னூலில் "அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என்றார். கார்லைல் கருத்தை ஒட்டியே ஆங்கிலக் கவிஞரும் அறிஞருமாகிய மாத்யூ ஆர்னல்டு சிறிது விரிவாக, "புலவன் தன்னுடைய அனுபவத்தை அப்படியே சொல்லோவியமாக்கி, அறம் உரைத்து, அறிவு கொளுத்தி, மக்களை நல்வழிப்படுத்துவதே இலக்கியம்" என்று இலக்கியத்தைப் பற்றி விளக்கமளித் தார். இவ்வாறு மேலைநாட்டு அறிஞர்களுள் சிலர் இலக்கி யத்தைக் குறித்துக் கூறியவற்றைக் கண்டோம்.

இனி, நம் தமிழகத்துப் பண்டைச் சான்ரேர்கள் தங்க ளது ஆன்ற அனுபவத்தால் குறிப்பாகவோ, வெளிப்படை யாகவோ இலக்கியத்தைப் பற்றி ஆங்காங்குக் கூறிய கருத் துக்களைத் தொகுத்துக் காண்போம். தமிழில் சீரிய கூரிய பழந்தமிழ் இலக்கணமாகவுள்ள தொல்காப்பியத்தை இயற் றிய பேரறிஞர் ஒல்காப் புகழ்மிக்க தொல்காப்பியனர், அழகுடையதாக இருப்பதே இலக்கியம் என்னும் கருத்தை உட்கொண்டு இலக்கியத்திற்குப் பொதுவாக வனப்புஎன்று பெயர் வழங்கியிருப்பதை அவருடைய இலக்கண நூலின் பகுதியாகிய பொருளதிகாரத்தில் செய்யுளிலக்கணம் கூறு மிடத்து உள்ள "வனப்பியல்தானே வகுக்குங் காலை" என் னும் நூற்பாவில் குறிப்பாகக் காண்கிருேம். மற்றத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இவ்வடியை விட்டிருக்கப் பேராசிரியர் மட்டும் இவ்வடியுடன் அந்நூற்பாவை வெளி யிட்டு, "வனப்பு என்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்ட வழிப் பெறுவதோர் அழகாதலின் அவ்வாறு கோரும்" என்று உரையெழுதி விளக்கியிருக்கிருர். இதனுல் 'அழகுற அமைவதே இலக்கியம்' என்னும் கருத்து பேராசிரி யருக்கும் உடன்பாடு என்பது புலனுகிறது.

முற்கூறிய நற்றமிழ்ப் பனுவலைத் திருக்குறளில் வான்புகழ் வள்ளுவர், "நவில்தொறும் நூல்நயம் போல" என்னும் உவமை வாயிலாக, படிக்கப் படிக்க இன் இன்பம் தருவதாக இருத்தல் வேண்டும் இலக்கியம் எனக் குறிப்பதாகத் தெரிவித்திருப்பதை உய்த்துணரலாம்.

கார்லைலும் மாத்யூ ஆர்னல்டும் கருதியது போலவே இவர்களுக்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன் வாழ்ந்த பவணந்தி முனிவரும் மாந்தரது மனக்கோட்டத்தை நீக்கப் பயன்படுவதே நூல் என்னும் கருத்தோடு தமது நன்னூல்

என்னும் இலக்கண நூலில், ''மாந்தர் மனக்கோட்டம் தீர்க்கும் நூல்'' என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். நன்னூலார் கருத்தைப் பின் வந்த கார்லைலும் மாத்யூ ஆர்னல்டும் அறிய மாட்டார்கள். எனினும், இம்மூவரும் இலக்கியத்தைக் குறித்து ஒருமைப்பாடான கருத்தை வெளியிட்டிருப்பதைக் கண்டு வியப்படையாமல் இருத்தல் முடியாது.

அருந்தமிழ் மொழிக்குப் பெருங்கருவூலமாக வெளிவந்து கொண்டிருக்கும் கலைக்களஞ்சியம், (இரண்டாம் பகுதி) ''ஒருவன் தன் அனுபவத்தைக் கற்பனை மூலம் எண்ணிப்பார்த்து. அதைச் சொற்கள் மூலம் செய்யுள் நடையிலோ உரைநடையிலோ பிறர் உள்ளத்திலும் உணர்ச்சி எழுமாறு அழகுபடச் செய்வது இலக்கியம்'' என்று மேலை நாட்டுக் கருத்தையும் கீழை நாட்டுக் கருத்தையும் பெரும்பாலும் இணைத்து இலக்கியத்திற்கு நல்லதொரு விளக்கம் தந்திருக்கிறது; ஆனால் கலை கலைக்காகவே என்னும் கருத்தையுட்கொண்டு நல்லாற்றுப் படுத்தல் என்னும் நோக்கை விட்டிருக்கிறது. அதையும் சேர்த்து ஒருவர் தம் அனுபவத்தையோ, இப்படியிருக்கவேண்டும் என்று கருதுவதையோ மொழியின் வாயிலாகச் செய்யுள் நடையிலோ உரைநடையிலோ நல்லாற்றுப் படுத்தும் குறிக்கோளையும் ஓரளவு உள்ளத்தில் இருத்திப் பிறர் உள்ளத்திலும் உணர்ச்சி எழுமாறு அழகுறச் செய்வதே இலக்கியம் என்று இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். நல்லது அல்லாத கருத்தை அழகுறச் சொல்வது பொல்லாத இலக்கியம் என்றே கருதுதல் வேண்டும். நல்ல இலக்கியமே நாட்டுக்கு வேண்டுவது.

இலக்கியத்தோற்றம்

தமிழ்நாட்டில் பலர்க்கு இலக்கியம் முற்பட்டதா? இலக்கணம் முற்பட்டதா? என்று ஐயம் தோன்றுவதுண்டு. ஒரு சிலர் இலக்கணம் தோன்றிய பின்னரே இலக்கியம் ஏற்பட்டதாகக் கருதி எழுதியிருப்பதையும் படித்திருக்கிறேன். அவர்கள் இக்கால நிலையைக்கண்டு அவ்வாறு எண்ணினார்கள் எம்மொழியிலும் முதலில் தோன்றியது பாட்டே. பாட்டிலிருந்தே மொழி தோன்றியது என்று மொழி நூலறிஞர் யெஸ்பர்ஸன் கூறுகிறார் கவிதை இலக்கியமே முற்படத் தோன்றியது; உரைநடை. இலக்கியமோ பிற்படத் தோன்றியது. இவ்வுண்மைஎல்லா மொழிகளுக்கும் பொதுவானது தமிழைப் பொறுத்த மட்டில் கவிதை இலக்கியம் தோன்றித் தளர்ந்த பன்னெடுங்காலத்துக்குப் பின்னரே உரைநடை இலக்கியம் தோன்றியது. மக்கள் மிகுந்த நாகரிகம் அடைந்த காலத்திற்றான் உரைநடை இலக்கியம் தோன்றியது. தமிழ்மொழியில் கவிதை இலக்கியம்வளர்ச்சியுற்ற பின்பே இலக்கணம் தோன்றியது இவ்வுண்மையைப் பேரகத்தியத்திரட்டில் காணும் நூற்பா நன்கு விளக்குகிறது அது வமாறு:-

> ''இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;
> எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
> எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
> இலக்கியத் தினின்று(ம்) எடுபடும் இலக்கணம்''

இந்நூற்பாவை அகத்தியர் இயற்றியதாகக் கூறுவர். இஃது எவ்வளவு உண்மையோ? போலிநூலாயிருப்பினும் பேரகத்தியத் திரட்டுக் கூறும் உண்மை தவறன்று என்றுணர்க. மேற்குறித்த நன்னூலாசிரியர் பவணந்தி முனிவரும்,'' இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்இயம்பலின்'' என்று 141வது நூற்பாவில் கூறியிருப்பது இக்கருத்தை நன்கு வலியுறுத்து

கிறது. இது பண்டைய நிலை இன்று இலக்கணத்தை ஒட்டியே இலக்கியம் தோன்றுகிறது. இஃது இன்றைய நிலை.

இலக்கிய நடை

தமிழில் பலர் செய்யுள்நடையில் அமைந்திருப்பதையே இலக்கியம் என்று கருதுகின்றனர். பெரும்பாலான நல்ல இலக்கியங்கள் தமிழ்மொழியில் செய்யுளில் இருப்பதே அவ்வாறு எண்ணுவதற்குக் காரணமாயிற்று. செய்யுள் நடையில் அமைந்திருக்கும் நூலும் இலக்கியமே; உரைநடையில் இயற்றப்பட்டிருப்பதும் இலக்கியமே. செந்தமிழில் இருப்பதுமட்டும் இலக்கியம்என்றுகருதலாகாது;கொடுந்தமிழில் இருப்பதும் இலக்கியமே திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் போன்ற நூல்களைமட்டும் இலக்கியம்என்று கருதுவது கூடாது; அல்லி அரசாணிமாலை, தேசிங்குராஜன் கதை, அழகர் வருணிப்பு, வழிநடைச்சிந்து போன்ற நூல்களையும் இலக்கியம் என்றே கருதுதல் வேண்டும். ஆனல், பொதுவாக எம்மொழியிலும் நல்ல மொழியில் இயற்றப்பட்டிருப்பதையே இலக்கியம்என்று கருதும்மனப்பான்மை இருந்து வருகிறது. உண்மையில் எல்லாம், இலக்கியங்களே என்றுணர்தல் வேண்டும். உரைநடையில் இருக்கும் சிறுகதை, நெடுங்கதை (Novel), வரலாறு, கட்டுரை முதலிய யாவும் இலக்கியமே என்க.

(143 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழமுதிர்சோலை வரலாறு

(கி. பழநியப்பன்)

பழமுதிர்சோலை

இத்துணைப் பெருமை வாய்ந்த இடபமலையிலுள்ள பழமுதிர்சோலையை ஆசிரியர் நக்கீரனார் திருமுருகாற்றுப் படையில் படம்பிடித்துக் காட்டுகின்றார். துணியினால் ஆன பலகொடிகள் காற்றில் ஒன்று சேர்ந்து அசைந்து கொண் டிருப்பதுபோல் அருவிகள் வீழ்ந்துகொண்டிருந்தன. அவைகள் அகில் மரங்களையும் சந்தன மரங்களையும் உருட் டிக்கொண்டும், சிறு மூங்கில்களின் வேரைப் பிளந்து கொண்டும், விண்ணைத் தொடுகின்ற மலைகளின் உச்சியி லுள்ள ஞாயிறு மண்டலத்தை ஒத்த தேன்கூடுகளை அழித் துக்கொண்டும் வந்தன. மேலும் நல்ல பலாப் பழங்களின் சுளைகளும் சுரபுன்னை மலர்களும் அவ்வருவிகளில் உதிர்ந்து நீரில் கலந்துவந்தன; யானைகளின் தந்தங்களை இழுத்துக் கொண்டு நல்ல பொன்னின் பொடிகளைக் கொழித்துக் கொண்டுவந்தன. வாழை மரங்களை அடியோடு ஒடித்துக் கொண்டும், வெள்ளம் மோதுவதால் உதிரும் இளநீர்க் குலைகளை இழுத்துக்கொண்டும் மிளகுக் கொடிகளின் கரிய கொத்துக்களைச் சாய்த்துக்கொண்டும் வந்தன. கருங்குரங்கு கள் நடுங்கும்படியும் யானைகள் தாங்கமுடியாதபடியும் குளிர்வீசின. மயில்களும் கோழிகளும் பயந்து ஓட ஆண் பன்றிகளும் கரடிகளும் மாடுகளும் முழக்கம் செய்ய மலை யுச்சியினின்று இழும் என்னும் ஓசையுடன் குதிக்கும் அருவியை யுடையது பழமுதிர்சோலை''

இவ்வாறு பண்டையில் விளங்கிய பழமுதிர்சோலையின் இன்றைய நிலையைக் கீழ்க்காணும் பாடல் இனிது விளக்கும்.

பழமுதிர் சோலையின் காட்சிகண்டேன்—நான்
பசுமை மலைகளின் தொடர்ச்சி கண்டேன்
அழகரின் ஆலயம் சுற்றிவந்தேன்—பல
அரிய கலைகளைக் கண்டுவந்தேன்
வண்ண மலர்கள் வரிசையெங்கும்—அதில்
வண்டினம் பற்பல பண்ணிசைக்கும்
விண்ணினை முட்டும் மரங்களெங்கும்—அதில்
விரைந்து முகிலும் இனிதுறங்கும்
மருண்டு மந்திகள் ஓடினவே—ஆடும்
மயில்களும் தோகை விரித்தனவே
அருவிகள் எங்கும் இழிந்தனவே—சிற்
றுறுகள் எண்ணில ஓடினவே
காட்டு விலங்கு திரிந்ததங்கே—அதைக்
காரிருட்சோலை மறைத்ததங்கே
கூட்டமாய்ப் புள்ளினம் வாழ்ந்ததங்கே—அதன்
குரலிசை காதைத் துளைத்ததங்கே
பொங்கும் சுனையதி லாடி நின்றேன்—பரம்
பொருளின் அருளும் வேண்டி நின்றேன்
அங்கொரு காட்சியைக் கண்டுவந்தேன்—ஓர்
அழகிய வேலுருக் கண்டுவந்தேன்
அழகுயர் கந்தனு மங்கிருந்தான்—கள்ள
(அ)ழகனும் வேலனைக்காட்சி தந்தான்
அழகனும் வேலனு மங்கிருந்தான்—அவன்
அண்டின பேர்க்கெலாம் அருள் புரிந்தான்.

(1-10-59 தமிழ்நாடு நாளிதழ்)

திருப்பரங்குன்றில் தெய்வயானையுடன் வீற்றிருக்கும் முருகப்பெருமான் இப்பழமுதிர்சோலைமலையில் வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருக்கும் காட்சியையும் இத்தலத்தின் சிறப்பையும் அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழில் பல பாடல்களின் மூலம் விளக்குகின்றார்.

"திருமலிவான (செல்வம் மிகுந்த) சோலைமலை, பிட்டுக்கு மண் சுமந்த சொக்கநாதப்பெருமான் வீற்றிருக்கும் மதுரைக்கு அருகிலுள்ளது. இது காசி, இராமேசுவரம், இரத்னகிரி, திருச்செங்கோடு, திருவாரூர், வேலூர், தேவூர், காஞ்சிபுரம், மதுரை, திருப்பறியல், திருவானைக்கா, மூதூர், திருவண்ணாமலை, திருத்தணிகை, திருச்செந்தூர், நாகப்பட்டினம், சீர்காழி, வேளூர், பழநிமலை, திருக்குறுக்கை, திருநாவலூர், திருவெண்ணெய்நல்லூர் என்னும் தலங்களிலும் சிறந்து விளங்குவதாகும். முருகனுக்குப் பிரியமான இடம் இதுவே. முனிவர்களும் தேவர்களும் ஞானம்பெற்ற தூய்மையான இத்தலத்தில் முருகப்பெருமான் மயிலின்மேல் ஏறிவந்து வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருக்கின்றார். சூரனையும் அவன் சுற்றத்தாரையும் அழித்து வேலாயுதத்தைத் திருக்கையில் ஏந்தி சோலைமலையில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்." இவ்வாறு அருட்கவி அருணகிரிசுவாமிகள் அருளியுள்ளார்கள்.

சிலம்பாறு

சோலைமலையிலுள்ள சிலம்பாறு (நூபுரகங்கை) திருமுருகன் பாதசரத்திலிருந்து தோன்றிய வரலாறு வடமொழிக் கந்தபுராணம் பிரமசங்கிதையில் கூறப்பட்டுள்ளது: "......இடபகிரியில் முருகக் கடவுளின் பாதசரத்தி

லிருந்து ஒரு நதியுண்டாகி இருக்கிறது. அதற்கு நூபுர (சிலம்பு) கங்கையென்னும் பெயர் உலகத்திலே பெரிதும் வழங்கப்படுகிறது. அம்மலையின் கீழ்ப்பிரதேசத்தின் அருகே விஷ்ணுமூர்த்தி பரமசுவாமி என்னும் பெயருடன் பிரசித்தியோடு வசித்து, அப்பருவதத்தில் அமர்ந்தருளும் முருகக் கடவுளை இருதயத்திலே தியானித்துக்கொண்டிருக்கின்றனர்.'' (அழகர் கோவிலிலுள்ள மூலவர் இன்றும் பரமசுவாமி என்றே வழங்கப்படுகிறார்.)

நக்கீரர்

மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் செந்தமிழ்ப் புலவர்களுள் மிகச் சிறப்புடையர். ஒரு சமயம் தருமி என்னும் ஓர் அந்தணன் பொருட்டுச் சோமசுந்தரப்பெருமான் பாடியருளிய 'கொங்கு தேர் வாழ்க்கை'' என்னும் செய்யுள் பொருட் குற்றமுடைத்தென்று நக்கீரனார் வாதாடினார். இறைவனார் வெகுண்டு நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டித் தாம் யாரென்று அறிவித்தனர். அதற்கும் அஞ்சாத நக்கீரனார் நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்றார். எனினும் இறைவனாரின் நெற்றிக் கண் வெப்பத்தைத் தாங்க இயலாது பொற்றாமரைக் குளத்தில் அழுந்தினார். (இதன் விரிவைத் திருவிளையாடல் புராணத்திற் காண்க) அவ்வாறு துன்புற்ற அவரை மீட்டு, மேலும் இலக்கண ஆராய்ச்சி செய்துவர இறைவன் கட்டளையிட்டார்.

அக்கட்டளையைத் தலைமேற்கொண்டு நக்கீரனார் பழமுதிர்சோலையடைந்து ஆங்கு வீற்றிருக்கும் வெற்றி வேல் முருகனை வணங்கித் தமிழ் இலக்கணம் கூற வேண்டினார். 'வேண்டின வேண்டியாங்கருளும்' முருகப் பெருமானும் அவ்வாறே கீரனார் விருப்பத்தை நிறைவேற்றிப்பின்

''உலகம் உவப்ப'' என்று அடி எடுத்துக் கொடுத்துத் தாம் விருப்புடன் எழுந்தருளியுள்ள திருப்பதிகளின் சிறப்பைக்கூறி உலகோர்க்கு வழிகாட்டிப் பாடக் கட்டளையிட்டார். கீரனாரும் அளவிலா மகிழ்ச்சியுற்று ''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு'' என்று தொடங்கிப் 'பழமுதிர்சோலை மலைகிழவோனே'' என்றுமுடித்து முன்னூற்றுப் பதினேழு அடிகளில் திருமுருகாற்றுப் படையைப் பாடியருளினர். இவ்வாறு முருகப் பெருமான் அடியெடுத்துக் கொடுத்ததை ''க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழும்'' அருணகிரியார் 'திருப்புகழும்' விளக்கமாகக் கூறுகின்றன:

''புவியில் நக்கீரரையும் புகழ்கொண்ட
அருணகிரி நாதரையும்
கவிசொல் என்றேஅடி எடுத்துக் கொடுத்தவர்
கனிவாயின் முத்தம் அருளே''

(க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ்)

'வளவாய்மை சொற்பிர பந்தமுளகீரனுக்கு கந்து
மலர் வாயி லக்கணங்க ளியல் போதி
அடிமோனை சொற்கிணங்க வுலகாமு வப்ப என்று
னருளா லளிக்கு கந்த பெரியோனே—
அடியேனு ரைத்த புன்சொ லதுமீது நித்த முந்த
னருளேத ழைத்து கந்து வரவேணும்''

(திருப்புகழ்)

இவ்வாறு திருமுருகன் அடியெடுத்துக் கொடுத்த திருமுருகாற்றுப்படையை வேதமாகவே அருளாளர்கள் கருதினர். ''கீதமொழி கூட்டி வேதமொழி சூட்டு கீரர்'' என்ற அருணகிரியார் வாக்கே இதற்குச் சான்றாகும். மேலும் ஒரு சமயம் திருப்பரங்குன்றத்தே உறையுமொரு

பூதம் நக்கீரரையும் மற்றும் 999 சிவனடியார்களையும் ஒரு குகையில் சிறையிட்டு வைத்ததும், அச்சிறையினின்றும் தப்புவதற்குக் கீரனுர் இத் திருமுருகாற்றுப் படையைப் பாடி முருகன் அருளால் விடுதலைபெற்ற வரலாற்றையும் திருப்பரங்குன்றத் தலபுராணம் விரிவாகக் கூறுகின்றது.

இன்றும் நாடோறும் திருமுருகாற்றுப்படையை ஓதி, திருமுருகனின் திருவருளால்வேண்டுவவேண்டியாங்குப் பல்லோர் எய்தி வருகின்றனர்.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினல் — முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைந்த எல்லாம் தரும்.

ஒருமுரு காவென்றன் உள்ளங்குளிர உவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே.

4

கவலை வேண்டாம்

[இராம. சுந்தரம், எம்.ஏ-]

நீண்டு வளர்ந்த நெடுஞ்சாலை தெற்கு வடக்காகச் செல்கிறது, ஆலும் அரசும் புளியும் வேம்பும் அடர்த்தியாக நின்று தண்ணிழல் தருகின்றன. சாலையின் ஒரு பக்கம் பூவாற்றின் சுழியாட்டம்; மறு மருங்கில் நெடிதுயர்ந்து நிற்கும் மலைப்பகுதி. சாலையில் செல்லும் வழிப்போக்கர் தங்கிச் செல்ல ஆங்காங்கே பல விடுதிகள். இவ்விதமான இன்பச் சூழலில் இருவர் வழி நடந்து செல்கின்றனர். ஒருவர் கிழக்கிலிருந்து வந்தவர். மற்றவர் மேற்கிலிருந்து வந்தவர். இருவரும் ஓரிடத்தில் தலைக்கூடினர் (சந்தித்தனர்). அவர்கள் பயணம் செல்லும் திசை தெற்கு நோக்கியதாகும், கால் நடைப் பயணிகளான அவர்கள் ஒருவரைஒருவர் தலைக்கூடியதும் தத்தம் மொழியில் வணக்கம்' சொல்லி வரவேற்றுக் கொண்டனர் ஆனால் யார் என்ன சொல்லுகிறார் என்பது அவர்களுக்குப் புரியவில்லை காரணம் மொழி வேற்றுமையே. கருத்துத் தொடர்புக்கு உதவி செய்யும் கருவியான மொழி இருவருக்கும் இருந்தும் சமயத்தில் பயன் படாததால். இருவரும் ஊமைகளாகவே தம்பயணத்தைத் தொடங்கினர். இன்பச்சூழல், இனிய பொழுது இருந்தும் அவர்கள் பயணம் சுவைக்கவில்லை. இந்நிலையைப்போக்கி, இன்ப நிலையை உண்டுபண்ண மேற்கத்தியார் உறுதி எடுத்துக்கொண்டார். எப்படி?

மேற்கத்தியாருக்கு ஒலியியற் பயிற்சி உண்டு. அதை அப்பொழுது பயன்படுத்த முனைந்தார். எனவே, கிழக்கத்தியாரைப் பார்த்து, 'உங்கள் மொழியை நான் முதலில் கற்

றுக்கொண்டு, என் மொழியைத் தங்களுக்குச் சொல்லித் தருகிறேன். அதற்குத் தங்கள் உதவி வேண்டும்' என்ருர். அவருக்கோ இது புரியவில்லே. 'என்ன' என்று அடையாளங் காட்டி வினவினர். மேற்கத்தியார் தம் கருத்தை அவருக்குப் பலவித அடையாள வெளிப்பாட்டினல் புரியவைத்தார். அவரும் தலேயாட்டினர், பக்கத்திலிருந்த சுமைதாங்கிக் கல்லின் அருகில் இருவரும் அமர்ந்தனர். மேற்கத்தியார் பேஞவும் தாளும் எடுத்துக் கொண்டார். சில ஒலிகளேத் தாமாகவே ஒலித்துக்கொண்டார். பிறகு கிழக்கத்தியாரிடம், அருகிலிருந்த ஒரு மரத்தைச் சுட்டிக்காட்டி 'என்ன அது?' என்று அடையாளங்காட்டி வினவினர். அவர் அதற்குரிய தம்மொழிச் சொல்லேச் சொன்னர். பிறகு வேருெரு மரத்தைச் சுட்டிக்காட்டி 'அஃது என்ன?' என்ருர். இத்தடவை கிழக்கத்தியார் சொன்னது முன் சொன்ன சொல்லினும் மாறுபட்டதாகத் தோன்றியது. இரண்டையும் எழுதிக் கொண்ட மேற்கத்தியார் அவற்றிலுள்ள வேறுபாட்டைக் கண்டார். இரண்டிலும் பொதுவாக ஒரு கூறு இருந்தது. அதை மரம் என்று கொண்டார். ஐயத்தைப் போக்கிக் கொள்ள மரம் ஒன்றனே வரைந்து காட்டி அஃது என்ன? என்ருர், மற்றவர் சொன்ன சொல்லே முன்தாம் மரமென்று தெளிய உதவிய கூற்ருேடு ஒப்பிட்டு, இரண்டும் ஒன்ருக இருக்கக் கண்டார். பிறகு முதற் சொல்லில் மற்ருெரு கூறு அரசையும், இரண்டாம் சொல்லிலுள்ள மற்ருெரு கூறு ஆலேயும் குறிப்பதை உணர்ந்தார், எப்படியென்ருல் அவர் முதலில் சுட்டியது அரசாகவும், பின்னது ஆலாகவும் இருந்தன. ஆகவே இப்பொழுது மேற்கத்தியார் கிழக்கத்தியாரின் மொழியிலுள்ள இரண்டு சொற்களேத் தெரிந்துகொண்டார். இப்படியே அவர் வழியிலுள்ள பல பொருட்களேயும் காட்டி, வினவி மற்றவரது மறுமொழியை ஒலியியல் முறைப்படி எழுதிக்கொண்டார். அவர் காட்டிக் கேட்ட

பொருள்களில் சில மரமாகவும், சில செடி கொடிகளாகவும் சில விலங்குகளாகவும் வேறு சில நீர், மண், கல் ஆகியவை களாகவும் இருந்தன. ஒரு மணி கால அளவில் பல சொற் களை அவர் அறிந்துகொண்டார், உடனே தாம் அவற்றை எழுதிக்கொண்டபடி ஒலித்துக் காட்டினார். மொழிக்குரிய கிழக்கத்தியார் அவரின் திறமையைக் கண்டு வியந்தார்.

சிறிது தொலை நடந்தனர். உணவு உண்ணும் நேரம். அந்நேரத்திலும் தம்மிடமுள்ள உணவு வகைகளைக் காட்டி யும், மற்றவரிடம் உள்ள உணவு வகைகளைக் காட்டியும் அவற்றிற்குரிய சொற்களைக் கேட்டு எழுதிக்கொண்டார். இப்படியே படிப்படியாக, சொல் நிலையிலிருந்து சொற் றொடர் நிலைக்கு வந்துவிட்டார். மேலும் அவர் ஊக்கத்து டன், மற்றவரைப் பார்த்துப் பாட்டொன்று பாடச் சொன் னார். அவர் பாடிப் பொருள் சொல்ல, இவர் எழுதிக்கொண் டார். இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக கிழக்கத்தியாரின் மொழி மேற்கத்தியாருக்குத் தெரிய வரலாயிற்று. இருவரும் தாங்கள் வந்துசேர வேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்த னர்.

அங்குத் தங்கியிருந்த சில நாட்களில் கிழக்கத்தியரிட மிருந்து இன்னும் பல செய்திகளைத் தெரிந்து கொண்டார். கிழக்கத்தியாரின் விருப்பப்படி அவருக்கும் ஒலியியல் பயிற்சி அளித்தார் சின்னாட்களுக்குப்பின் இருவரும் வந்த வழியே திரும்பினர். அப்பொழுது மேற்கத்தியாரின் முறை யைப் பின்பற்றிக் கிழக்கத்தியார் அவரது மொழிபற்றி அறிந்து குறித்துக்கொண்டே வந்தார். மேற்கத்தியாரின் மொழி இவருக்குப் புரியலாயிற்று. பிறகு இருவரும் மேற்

கத்தியாரின் ஊரை அடைந்தனர். அங்குத் தம்மிடமிருந்த ஒலிப்பதிவுக்கருவி மூலம் கிழக்கத்தியாரின் ஒலிகளைப் பதிவு செய்துகொண்டார். தாம் முன்பு குறித்துக் கொண்ட யாவற்றையும் அதில் இடம் பெறச்செய்தார். தம்மொழி ஒலிகளையும் பதிவு செய்து அவருக்குக் கொடுத்தார். இருவரும் மனமகிழ்ச்சியுடன் பிரிந்து சென்றனர்.

புரியாதிருந்த இருமொழிகள் எளிதில் இருவருக்கும் புரிந்துவிட்டன. இதற்குக் காரணம் ஒலியியற்பயிற்சியே. இவ்வொலியியல் பயிற்சி மொழியியலின் அடிப்படைக் கூறுகளில் முதன்மையானதாகும். இதன் அடிப்படையில் மொழியியலின் மற்றைய கூறுகளான் ஒலிக்கோள், சொற்கோள், தொடரிலக்கணம், பொருளாக்கம் ஆகியவை வளர்ந்து மொழியை முற்றும் உணர உதவி செய்கின்றன. இம்மொழியியல் அறிவினால் இன்று மொழி தெரியாத நாட்டிற்கு நாம் சென்றாலும் அம்மொழியை எளிதில் கற்றுக் கொள்ள முடியும். ஒலியியல் பயிற்சியில் நாம் மிகுந்த பற்றுக் கொண்டு படித்துவிட்டால். இம்மொழிக்கல்வி எளிதாக அமையும்.

நான் முன்பின் அறியாத மலையாள மொழி வழங்கும் நாட்டில் வாழ்கிறேன் எனக்கு மேலே குறிப்பிட்ட ஒலியியற் பயிற்சி சிறிதளவு உள்ளதாகையால், ஒரு மலையாள நண்பரை அணுகி, அவரை ஒலிக்கச் செய்து, ஒலியியல் முறைப்படி எழுதி அம்மொழியைக் கற்று வருகிறேன். கொஞ்சநாள் பயிற்சிக்குப் பிறகு நான் மலையாள மொழியின் இலக்கணக் கூறுகளைத் தெரிந்து கொண்டேன். 'வரும்' 'போகும்' என்று 'உம்' வரின் அஃது எதிர்காலம்; 'வருந்து'

,இரிக்குந்து' என்று 'உந்து' வரின் அது நிகழ் காலம்; 'கண்டு' 'போயி' 'அடிச்சு' என்று 'உ' 'இ' 'ச்சு' ஆகியவை வரின் அஃது இறந்தகாலம் என்பன எனக்குத் தெரியவந் தன. மூக்கொலிகளின் செல்வாக்கும், நகர னகர வேறு பாடும் இம்மொழியில் எந்த அளவு விளக்கம் பெற்றுள்ளன என்பவையும் என்னல் அறியக் கூடியனவாக இருந்தன கூடிய மட்டும் பேசவும் எழுதவும் முடிந்தன. சுற்றுச் சூழ லும் இதற்கு உதவி புரிந்தன.

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும், எனது பேராசிரியரும் ஆகிய உயர்திரு. வி. ஐ. சுப்பிரமணி யம் அவர்களும், நானும், என்னுடன் ஆராய்ச்சிப் பணி புரிந்து வரும் நண்பர்கள் காமாட்சி, அகத்தியலிங்கம், சுப்பிரமணியம் ஆகியவர்களும் தென் ஆப்பிரிக்காவிலி ருந்து இங்கு படிக்கவந்துள்ள நண்பர் திரு. ஓம்பேரே என்பவரை அழைத்து வந்து அவரது மொழியைக் கற்றுத் தரச்சொன்னேம். அவரது மொழியின் பெயர் துளுவோ (duluvoɔ) என்பதாம். நாங்கள் ஆங்கிலத்தில் சில சொற் களைச் சொல்லி. அச் சொற்களின் பொருள்களைக் குறிக்க அவரது மொழியில் என்ன சொற்கள் வழங்குகின்றன எனக் கேட்டு, அறிந்து கொண்டோம். இரண்டு மூன்று நாள் படிப்பில் நாங்களே அவரது மொழியில் உள்ள சொற்கள், இலக்கண அமைப்புகள் பற்றி அவர் சொல்லு முன் சொல்லி விளக்கிக் காட்டினேம். அவர் மிகவும் வியந்

தார். மேலும் சில நாட்கள் அவரது உதவி கிடைத்திருப் பின் அம் மொழியின் முழு இயல்பும் எங்களுக்குத் தெரிய வந்திருக்கும். எதிர்பாராத அலுவல்கள் இடைவேளேயாக அமைந்துவிட்டன.

உயர்திரு. டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் மலேயாள நாட்டில் வழங்கும் கிளே மொழி ஒன்றனே ஆராய்ந்து கட்டுரை எழுதியுள்ளார். கோடா என்ற திரா விட மொழியை டாக்டர் எமனே என்ற அமெரிக்கர் ஆராய்ச்சி செய்து நூலொன்று எழுதியுள்ளார். புளும்பீல்டு என்ற அறிஞர் Algonquian மொழியைச் சேர்ந்த-அமெ ரிக்க இந்தியர்களால் பேசப்படும் கீழை ஓஜிப்வா (Eastern osibwa) என்ற மொழியை ஆராய்ந்து எழுதியுள்ளார். பெஞ்சமீன் லீஉர்ஃப் என்பவர் மாயா, கோபி மொழிகளே ஆராய்ந்து கட்டுரைகள் வரைந்துள்ளார். நைடா, ஹாக் கெட், பைக்போன்ற பேரறிஞர்கள் இவைபோல பல நூல் களே வெளியிட்டுள்ளார்கள்.

ஆகவே, வேற்று மொழியொன்று நமக்குப் புரியாத புதிராக இருந்து கற்றுக்கொள்ள முடியாத அவலநிலேயை உண்டுபண்ணுகிறதே என எண்ணி இனிக் கவலேயோ அச்சமோ கொள்ளத் தேவையில்லே. அக்கவலே, அச்சம், தயக்கம், மயக்கம் ஆகியவற்றைப்போக்கி, அம் மொழியை எளிதில் கற்றுக்கொள்ள வழிவகை செய்து தரும் துறை

யாக மொழியியல் படிப்பு விளங்குகிறது. இம்முறையில் இன்று பல ஆப்பிரிக்கர், அமெரிக்க-இந்தியர்களின் மொழி ஆராயப்பட்டு விளக்கம் பெற்றுள்ளன. தமிழர்களாகிய நாமும் அம்முறைப்படிப் பல்வேறு மொழிகளையும் ஆராய்ந்து கற்றுப் பயனடைந்து பன்மொழிப் புலவர்களாக விளங்க வேண்டுமன்றோ?

திருத்தம்

சென்ற இதழ், பக்கம் 145ல் உள்ள

''திரு. ஐயங்காரவர்கள் மறுப்புக்கு மறுப்பு இன்னும் வெளிவரவில்லையாதலின் முன்னவர் கருத்தை ஏற்பதற்கில்லை'' என்ற தொடருக்குப் பதிலாக,

"திரு. ஐயங்காரவர்கள் மறுப்புக்கு மறுப்புத் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் செந்தமிழ் - தொகுதி 42 - பக்கம் 89ல் வெளியிட்டுள்ளார்கள்; அவர்கள் மறுப்பும் முன்னவர் கருத்தை அப்படியே ஏற்பதற்கோ, தள்ளுவதற்கோ இடம் தரவில்லை''

என்ற தொடரைச் சேர்த்துக்கொள்க.

ஆ. சிவலிங்கனார்